## அதான் (பாங்கு) சொல்லப்படும்போது ஓதவேண்டிய துஆ

*ஹஜ்ரத் அபு சயீத் க்ஹுத்ரி (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறிய தாக அறிவிக்கிறார்கள், நீங்கள் அதான் (பாங்கு) கூறப்படுவதைக் கேட் டால் முஅத்தின் கூறுவதையே நிங்களும் திருப்பிக்கூறுங்கள் (புக்ஹாரி, முஸ்லிம்).*

*ஹஜ்ரத் உமர் பின் க்ஹத்தாப் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:*

*முஅத்ஜின்* **اللَّهُ أَكْبَرُ** *என்று கூறினால் நீங்களும்* **اللَّهُ أَكْبَرُ** *என்று கூறுங்கள், அவர்* **أَشْهَدُ أنْ لاَّ إِلهَ إلاَّ اللهُ** *என்று கூறினால் நீங்களும்* **أَشْهَدُ أنْ لاَّ إِلهَ إلاَّ اللهُ** *என்று கூறுங்கள், அவர்* **أَشْهَدُ أنَّ مُحَمَّداً رَّسُوْلُ اللهِ** *என்று கூறினால், நீங்களும்* **أَشْهَدُ أنَّ مُحَمَّداً رَّسُوْلُ اللهِ** *என்று கூறுங்கள், அவர்* **حَيَّ عَلَى الصَّلاَةِ** *என்று கூறினால், நீங்கள்* **لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إلاَّ باللهِ** *என்று கூறுங்கள், அவர்* **حَيَّ عَلَى الْفَلاَحِ** *என்று கூறி னால், நீங்கள்* **لاَ حَوْلَ وَلاَ قُوَّةَ إلاَّ باللهِ** *என்று கூறுங்கள், அவர்* **اللَّهُ أَكْبَرُ** *என்று கூறினால், நீங்களும்* **اللَّهُ أَكْبَرُ** *என்று கூறுங்கள், அவர்* **لاَّ إِلهَ إلاَّ اللهُ** *என்று கூறினால் நீங்களும்* **لاَّ إِلهَ إلاَّ اللهُ** *என்று கூறுங்கள். எவர் ஒருவர் இதனை மனத்தூய்மையுடன் கூறுவாரோ அவர் நிச்சயம் சுவர்க்கத்தில் செல்வார் (முஸ்லிம்).*

* * *

www.uzairfalahi.com